**STC 583/2017**
**Date: 13.08.2026**
**PW : 1**
**பெயர் திரு.சேகர்**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

ஒரு முறை எவ்வளவு வாழை பயிர் செய்வேன் என்றால் ஆறாயிரம் முதல் ஏழாயிரம் வாழைகள் பயிர் செய்வேன். எனது குறுக்குவிசாரணையின்போது 1 1/2 ஏக்கர் பயிர்செய்துதான் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். குத்தகைக்கு 20 மரக்கால் தோட்டத்தையும் சேர்த்து தான் விவசாயம் செய்து வருகிறேன். மேற்படி விபரத்தை வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்ன வகையான வாழை பயிர்செய்து வருகிறேன் என்றால் கற்பூரவள்ளி, நாட்டு வாழை ஆகியவற்றை பயிர்செய்து வருகிறேன். எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலத்தில் என்ன வாழை பயிர்செய்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எதிரிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 20.04.2017 ம் தேதி கொடுத்தேன். வாழை எப்போது விற்பனை செய்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

வாழை விற்பனை செய்ததற்கான ரசீதை வைத்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் எந்தவொரு வாழையும் பயிர்செய்யவில்லை என்றால் சரியல்ல. வாழை விற்றபணம் 5,10,100 என வருமா என்றால் ஒவ்வொரு தடவையும் விற்கும்போது ரூ.20,000 அல்லது ரூ.30,000 வரும். எனது குறுக்குவிசாரணையில் எதிரிக்கு 500 ரூபாய் தாள்களை கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் 500 ரூபாய் தாள்கள் புதிதான நோட்டா அல்லது பழைய நோட்டா என்றால் எனக்கு ஞாபகமில்லை. 08.11.2016 தேதிக்கு முந்தைய ரூபாய் நோட்டிற்கும், பிந்தைய ரூபாய் நோட்டிற்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.500/- தாள்களின் கலர் எனக்கு தெரியுமா என்றால் கிரே கலர்.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.08.13 17:16:59 +0530

எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணம் எவ்வாறு எனக்கு வந்ததற்கான ஆவணம் என்னிடம் இல்லை என்றால் விவசாய வருமானத்திலிருந்து வந்த பணம். ஒவ்வொரு தடவையும் வாழைக்காய் விற்பனை செய்யும்போது எவ்வளவு விற்பனை செய்தேன் என நோட்டில் எழுதி வைப்பேன் என்றால் சரிதான். மேற்படி நோட்டை பார்வையிட்டால் எவ்வளவு விற்பனை செய்தேன் என தெரியவரும் என்றால் நோட் தற்போது இல்லை. குறுக்கு விசாரணையில் நான் இவ்வழக்கில் எதிரிக்கு பணம் கொடுப்பதற்கு முன்பு எதிரியிடமிருந்து கொடுக்கல் வாங்கல் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் கடன் கொடுத்துள்ளேன். குறுக்கு விசாரணையில் எதிரிக்கு வேறு எந்த தேதியிலும் பணம் கொடுத்தது கிடையாது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பேங்க் மூலமாக 04.11.2015 ம் தேதி வழக்கின் எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூ.25,000 பணம் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான்.

எனது தரப்பில் வங்கி மேலாளரை சாட்சியாக விசாரிக்க மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வங்கி மேலாளரை சாட்சியாக விசாரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். எதிரிக்கு ரூ.25,000/- பணம் மட்டும் கடன் கொடுத்தேன் என்றும் அதற்காக எதிரி எனக்கு பூர்த்திசெய்யப்படாத காசோலையை கொடுத்தார் என்றால் சரியல்ல 2017 ல் தான் எதிரி என்னிடம் காசோலையை கொடுத்தார். எதிரிக்கு ரூ.25,000/- பணம் மட்டும் கடன் கொடுத்தேன் என்றும் அதற்காக எதிரி எனக்கு கொடுத்த பூர்த்திசெய்யப்படாத காசோலையை கொண்டு இவ்வழக்கு பதிவுசெய்தேன் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் பேச்சிமுத்துவிற்கு எதிராக மற்றொரு காசோலை வழக்கு நான் தாக்கல் செய்து வழக்கானது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

வழக்கின் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணம் எந்த இடத்தில் வைத்து கொடுத்ததாக வழக்கறிஞர் அறிவிப்பிலோ, மனுவிலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு ரூ.2,00,000 கடன் கொடுப்பதற்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. பணம் ரூ.2,00,000 கொடுப்பதற்கு என்னிடம் வசதி உள்ளதற்கான ஆவணங்கள் இல்லை என்றால் உள்ளது. இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும்

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.08.13 17:17:02 +0530

என்று சொன்னால் சரியல்ல. எதிரி கையெழுத்து தமிழில் அல்லது ஆங்கிலத்தில் போடுவாரா என்றால் ஆங்கிலத்தில்தான் கையெழுத்து போடுவார்.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.08.13 17:17:06 +0530